පාර්ලිමේන්තුව

பாராளுமன்றம்

PARLIAMENT

2024.01.23

பாராளுமன்றத்தின் சபாநாயகர்

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களுக்கு

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்தின் குழுநிலையின் போது கொண்டுவரப்படுகின்ற திருத்தங்கள்

நிலையியற் கட்டளைகள் 57 மற்றும் 66 இன் அடிப்படையில், "நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம்" குறித்த குழுநிலையின் போது திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு பின்வரும் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பக்கம் 02
பிரிவு 03

09 முதல் 26 வரையிலான நிரல்களை (இரண்டு நிரல்களையும் உள்ளடக்கி) நீக்கி பின்வரும் நிரல்களை பதிலீடு செய்யவும்

அ) நிகழ்நிலைக் கணக்கு மூலமாகவோ அல்லது நிகழ்நிலை அமைவிடத்தின் மூலமாகவோ தடைசெய்யப்பட்ட கூற்றுகளை தொடர்பாடல் செய்வதன் மூலம் ஏற்படும் தீங்கிலிருந்து தனிநபர்களைப் பாதுகாத்தல்;

ஆ) நிகழ்நிலை கணக்கு மூலமாகவோ அல்லது நிகழ்நிலை இடத்தின் மூலமாகவோ நீதிமன்றத்துக்கு அவதூறு விளைவிக்கும் அல்லது நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பாரபட்சமற்ற தன்மையைப் பேணுவதற்குப் பாதகமாக இருக்கும் கூற்றுகளை தொடர்பாடல் செய்வதிலிருந்து பாதுகாப்பை உறுதி செய்தல்;

பக்கம் 03
பிரிவு 05

16 முதல் 22 வரையிலான நிரல்களை (இரண்டு நிரல்களையும் உள்ளடக்கி) நீக்கி பின்வரும் நிரல்களை பதிலீடு செய்யவும்

1) தகவல் தொழில்நுட்பம், சட்டம், நிர்வாகம், சமூக சேவைகள், பத்திரிகைகள், கலை, விஞ்ஞாபனம் மற்றும் தொழில்நுட்பம் அல்லது முகாமைத்தவம் ஆகிய துறைகளில் ஒன்று அல்லது

அதற்கு மேற்பட்ட துறைகளில் தகுதியும் அனுபவமும் கொண்ட, அரசியலமைப்பு சபையினால் பரிந்துரைக்கப்பட்டு சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக ஆணைக்குழு இருத்தல் வேண்டும்.

2) பிரிவு 6 இன் ஏற்பாடுளுக்கு உட்பட்டு, சனாதிபதியினால் நியமனங்களைச் செய்வதற்கு அரசியலமைப்பு சபையினால் உபபிரிவு (1) இன் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்க ஐந்து நபர்களின் பெயர்களை பிரேரிக்க வேண்டும்.

3) அரசியலமைப்புச் சபையின் பரிந்துரைகளைப் பெற்ற பதினான்கு நாட்களுக்குள், சனாதிபதி, அரசியலமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்பட்ட நபர்களை, உபபிரிவு (2) இன் கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும்.

4) (3) உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு நாட்களுக்குள் தேவையான நியமனங்களை சனாதிபதி செய்யத் தவறினால், குறித்த காலம் முடிவடைந்த தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்புச் சபையால் பரிந்துரைக்கப்பட்ட நபர்கள், ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுவார்கள்.

| | |
|---|---|
| பக்கம் 13<br>பிரிவு 15 | 12 தொடக்கம் 25 வரையிலான பிரிவுகளைக் கொண்ட நிரல்கள் (குறித்த இரண்டுத நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 15<br>பிரிவு 19 | 18 தொடக்கம் 29 வரையிலான பிரிவுகளைக் கொண்ட நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 16<br>பிரிவு 19 | 1 தொடக்கம் 6 வரையிலான பிரிவுகளைக் கொண்ட (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 33<br>பிரிவு 31 | 14 தொடக்கம் 29 வரையிலான நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கி பின்வரும் நிரல்களை பதிலீடு செய்யவும் |

உப தலைப்பு - "இடையீட்டாளர் பொறுப்புக்கான விடுபாட்டுரிமை"

இந்தச் சட்டதில் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தில் எவ்வாறு குறிப்பிட்டிருந்தாலுஞ்சரி, உபபிரிவு (2) இன்ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, பின்வரும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபரும், குறித்த நபர் உரித்து வகிக்கின்ற, நெறிப்படுத்துகின்ற அல்லது நிருவகிக்கின்ற நிகழ்நிலைத் தளத்திலிருந்து தொடர்பாடல் செய்கின்ற தடைசெய்யப்பட்ட கூற்றுக்கள் தொடர்பில் அல்லது இந்த சட்டத்தின் கீழ் தவறாகின்ற ஏதும் தடைசெய்யப்பட்ட கூற்றுகள் அடங்கிய தொடர்பாடல்கள் குறித்த நிகழ்நிலை நிலையத்தின் ஊடாக இறுதியாக பயனர்களுக்கு வழங்கியமை தொடர்பில் அல்லது ஏதும் நம்பத்தகாத நிகழ்நிலைக் கணக்கு தொடர்பில் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவு அல்லது ஏதும் தடை செய்யப்பட்ட கூற்றினால் அல்லது ஏதேனும் தொடர்பாடல் மூலம் எவரேனுமொரு நபருக்கும் ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால், வழங்கப்படும் இழப்பீடு தொடர்பாக எந்தவொரு குடியியல் அல்லது குற்றவியல் குற்றத்துக்கு பொறுப்பானதாக இருத்தலாகாது.

அ) இணைய இடையீட்டாளர் சேவை;

ஆ)இணைய சேவை வழங்குநர்

இ) டிஜிட்டல் விளம்பர இடைத்தரகர்; அல்லது

ஈ) கணினி வள சேவை

(2) (1) மற்றும் (2) உப பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகின்ற பொறுப்பு விடுபாட்டுரிமை குறித்த நபரினால்

அ) தொடர்பாடல் உருவாக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தால்; அல்லது

ஆ) இந்தச் சட்டத்தின் 36வது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 53 இன் அடிப்படையில் கட்டளையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைக் கோவை பின்பற்றப்படாவிட்டால்

ஏற்புடையதாகாது.

| | |
|---|---|
| பக்கம் 34 | 01 தொடக்கம் 16 வரையிலான பிரிவுகளைக் கொண்ட நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |

பிரிவு 31

| | |
|---|---|
| பக்கம் 47 | 10 மற்றும் 12 வரையிலான நிரல்களை நீக்கி பின்வரும் நிரல்களை பதிலீடு செய்யவும் |

பிரிவு 36

தொழில் நெறிமுறைக் கோவை”

| | |
|---|---|
| பக்கம் 47<br>பிரிவு 36 | 13 தொடக்கம் 29 வரையிலான நிரல்களை (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கி பின்வரும் நிரல்களை பதிலீடு செய்யவும் |

பக்க குறிப்பு- "தொழில் நடத்தை நெறிமுறைக் கோவை "

1. பின்வரும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் செயற்படும் பொருட்டு ஆணைக்குழுவினால் இணைய இடைத்தரகர்கள்" மற்றும் "இணைய சேவை வழங்குநர்கள்" ஆகியோருக்குப் பொருந்தக்கூடிய நெறிமுறைக் கோவை ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவைகளை வெளியிடலாம்.:

அ) வெறுக்கத்தக்க பேச்சு, வன்முறையைத் தூண்டுதல், தவறான தகவல், திரிவுபடுத்தப்பட்ட தகவல், இணையவழி மிரட்டல் மற்றும் துன்புறுத்தல் மற்றும் நிகழ்நிலை பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் உள்ளிட்ட தீங்கிழைக்கும் நிகழ்நிலை உள்ளடக்கம் மற்றும் நடத்தையை நிவர்த்தி செய்தல்;

ஆ) ஒருங்கிணைந்த நம்பத்தகாத நடத்தை மற்றும் ஏதேனும் நிகழ்நிலைக் கணக்குகளை தவறாகப் பயன்படுத்துவதைக் கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்;

இ) தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடைமுறை நடவடிக்கைகள் தொடர்பான செயல்பாட்டு தரநிலைகள் மற்றும் வெளிப்படைத்தன்மை அறிக்கையை நிறுவுதல்.

ஈ) முறைசாரா டிஜிட்டல் விளம்பர இடைத்தரகர்கள் அல்லது டிஜிட்டல் விளம்பர இடைத்தரகர்களின் முறைசாரா வடிவங்கள்; மற்றும்

உ) வேண்டுமென்றே இணைய இடைத்தரகர்கள் இலங்கையில் தொடர்பு கொள்ளப்படும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் எந்தவொரு கட்டண உள்ளடக்கம் தொடர்பான அனுசரணையாளர் மற்றும் பிற தகவல்களை வெளியிடுவதை ஊக்குவிப்பதற்கான முறையற்ற இணை இடைத்தரகர்கள்.

ஊ) பிரிவு 11 இன் பந்தி (இ) இன் கீழ் ஆணைக்குழு பிறப்பித்த ஏதும் உத்தரவுக்கு இணங்குவதற்கான காலம்

(3) இந்தப் பிரிவின் (1 ) உபபிரிவில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் செயற்படும் பொருட்டு பிரிவு 1 இன் உப பிரிவு (2)ல் உள்ள உத்தரவை அமுல்படுத்திய நாளிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள், தன்னார்வ அடிப்படையில், ( இதனகத்துப் பின்னர் நெறிமுறைக் கோவை என அழைக்கப்படுக்கின்ற) தொழில் நெறிமுறைக் கோவை உருவாக்கும் பொருட்டு இணைய இடைத்தரகர்கள்' மற்றும் இணைய சேவை வழங்குநர்கள்களுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்கி ஆணைக்குழு (வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கின்ற கட்டளை மூலம்) அறிவிப்பை வெளியிடல் வேண்டும்.

(4) (2) உப பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் காலத்திலிருந்து ஒன்பது மாதங்களுக்குள்

தன்னார்வ அடிப்படையில் நெறிமுறைக் கோவையை உருவாக்குவதற்கு 'இணைய இடைத்தரகர்கள்' மற்றும் இணைய சேவை வழங்குநர்களுக்கு முடியாத பட்சத்தில் அல்லது இணைய இடைத்தரகர்கள் மற்றும் இணைய சேவை வழங்குநர்களினால் இதனை ஒருங்கிணைத்து உருவாக்குவதற்கான அபிலாசயை ஆணைக்குழுவுக்கு அறிவித்து ஆணைக்குழுவுடன் நெறிமுறைக் கோவைக்கு இணங்கும் பட்சத்திலல் ஆணைக்குழு இந்தப் பிரிவின் (1) உபபிரிவில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நெறிமுறைக் கோவை உருவாக்கத்துக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(5) இந்த பிரிவின் உபபிரிவு (3) இன் படி ஆணைக்குழு நடவடிக்கை எடுத்த பிறகு, இலத்திரனியல் வடிவத்தில் நெறிமுறைக் கோவை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குள், 'இணைய இடைத்தரகர்கள்' மற்றம் இணைய சேவை வழங்குநர்களிடமிருந்த கருத்துகள், அவதானிப்புகளைப் பெற்று நெறிமுறைக் கோவை வரைவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு இணைய இடைத்தரகர்கள்' மற்றும் 'இணைய சேவை வழங்குநர்கள்' ஆகியோருடன் இணக்கப்பாட்டுக்கு வந்து நடவடிக்கை எடுப்பது ஆணைக்குழுவின் பணியாகும்.

(6) இந்தப் பிரிவின் உபபிரிவு (4) இன் படி, ஆணைக்குழு நெறிமுறைக் கோவைக்காக 'இணைய இடைத்தரகர்கள்' மற்றும் 'இணைய சேவை வழங்குநர்களிடமிருந்து' கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்று அவர்களின் இணக்கப்பாட்டு மற்றும் சம்மதத்தைப் பெற்றதன் பின்னர் ஆணைக்குழு பிரிவு 53-ன் கீழ் நெறிமுறைக் கோவையை வெளியிடுவதற்கு

முன்னர் நெறிமுறைக் கோவை வைரவு தொடர்பில் மக்கள் கருத்துக்களை வினவ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(7) பிரிவு 53 இன் படி நெறிமுறைக் கோவையை கட்டளையாக வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக வெளியிட்ட பிறகு, இந்தப் பிரிவின்படி உருவாக்கப்பட்ட நெறிமுறைக் கோவைக்கு ஏற்புடையதாக செயற்படுவதற்கு "இணைய இடைத்தரகர்கள்" மற்றும் "இணைய சேவை வழங்குநர்கள்" கட்டுப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| பக்கம் 48<br>பிரிவு 36 | 01 தொடக்கம் 30 வரையிலான நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 49<br>பிரிவு 36 | 01 தொடக்கம் 28 வரையிலான நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 50<br>பிரிவு 36 | 01 தொடக்கம் 30 வரையிலான நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 51<br>பிரிவு 36 | 01 தொடக்கம் 29 வரையிலான நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |
| பக்கம் 52<br>பிரிவு 36 | 01 தொடக்கம் 6 வரையிலான நிரல்கள் (குறித்த இரண்டு நிரல்கள் உட்பட) நீக்கவும் |

சந்திம வீரக்கொடி

(பா.உ)